Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.4/2017

**Depositions of PW- 6**

| Name | திரு.ராஜதுரை | Occupation | ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சண்முகையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2026.

04.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் வட்டக்காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கடந்த 2015ம் வருடம் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த பக்தவத்சலம் பணி ஓய்வு பெற்றுவிட்டதாலும் காவல் ஆய்வாளர் வேணுகோபால் மருத்துவ காரணங்களினால் சாட்சியம் அளிக்க முடியாத நிலையிலிருப்பதாலும் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.04.2015 அன்று 16.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் பக்தவத்சலம் நிலைய பொறுப்பிலிருந்தபோது நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திலிருந்து 09.10.2014 அன்று கிடைக்கப்பெற்ற சிஆர்எம்பி எண்.8143/2014 புகாரை பார்வையிட்டு அதன் அடிப்படையில் வழக்கின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.271/2015 பிரிவுகள்.294(b), 506(1), 417, 420 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியிடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கையையும் வாதியின் புகார்மனுவையும் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

பின்னர் அன்றைய தினமே 16.45 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுரேஷ், கணேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பார்வை மகஜர் அசாஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் பங்காருசாமி, அகிலா, பிரியா, லலிதா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் எதிரிகளை தேடிவந்த நிலையில் 19.03.2016 அன்று காலை 12.00 மணியளவில் திருவில்லிபுத்தூர் தேரடி பஸ் நிறுத்தத்திலிருந்த 1 வது எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டுவந்து பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் விசாரணையிலிருந்து 2 வது எதிரி ராமச்சந்திரன் இவ்வழக்கு சம்மந்தமான குற்றவியல் நடவடிக்கையில் எதுவும் ஈடுபடவில்லை என்று தெரியவந்ததால் அவரை இவ்வழக்கிலிருந்து நீக்கி எதிரி நீக்கல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **எதிரி நீக்கல் அறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் 30.09.2015 அன்று சார்பு ஆய்வாளர் பக்தவத்சலம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 29.03.2016 அன்று இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள்.294(b), 506(1), 417, 420 இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் புகார்மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம் போன்ற ஆவணங்கள் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.